**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,VIRUDHUNAGAR DISTRICT AT SRIVILLIPUTTUR.

Calendar)
Preliminary Register) CC.574/2022
Sessions)

Deposition of witness for ( Prosecution D.W.1
(Defence
(Court

| | | | |
|---|---|---|---|
| Name | வெள்ளைத்துரை | -- | |
| Father's Name | முனியாண்டி | Calling | |
| Village | சிவகாசி | Religion | |
| Taluk | | Age | 51/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 2nd day of Febraury 2026.

(எதிரி ஆஜர்)

**முதல் விசாரணை—**

நான் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் விருதுநகர் கிளையில் தொழில் நுட்ப கைவினைகராக பணிபுரிந்து வருகிறேன். நான் சிஐடியூ தொழிற்சங்கத்தில் விருதுநகர் மண்டல பொதுசெயலராக இருந்து வருகிறேன். 20.01.2025 தொழில்நுட்ப பணியாளர்களுக்கு வார ஓய்வு கொடுக்க வேண்டும் என்று விருதுநகர் நகர தொழிலக பாதுகாப்பு துறையினரிடம் புகார் கொடுத்திருந்தேன். அதன் அடிப்படையில் எங்கள் பணிமனையை ஆய்வு செய்தார்கள். அவர்கள் ஆய்வு செய்து குறைபாடுகள் குறித்து நிர்வாகத்திடம் விளக்கம் கேட்டார்கள். அதன் பிறகு நிர்வாகம் குறைகளை சரிசெய்து விட்டார்கள். மேற்படி பிரச்சனையில் நிர்வாகம் சிஐடியூ தொழிற் சங்கத்தோடு சமரசம் பேசி மேற்படி ஓய்வு நாட்களை ஈட்டிய விடுப்பாக சேர்த்துக் கொண்டார்கள். ஆகவே நான் புகாரில் சொன்ன குறைகள் தற்போது இல்லை. அதனால் மேல் நடவடிக்கை தேவையில்லை என்று தொழிலக பாதுகாப்பு துணை இயக்குநருக்கு கடிதம் கொடுத்துள்ளேன். மேற்படி 07.11.2023ம் தேதியிட்ட கடிதம் எ.ம.சா.ஆ.1 ஆகும். அந்த கடிதத்தின் அடிப்படையில் மேல் நடவடிக்கை தேவையில்லை என்று கூறிவிட்டேன்.

**குறுக்கு விசாரணை—**

நான் போக்குவரத்து கழகத்தில் சிஐடியூவில் மண்டல பொதுசெயலராக இருந்து வருகிறேன். எதிரி நாகராஜ் மீது நான் புகார் எதுவும் கொடுக்கவில்லை. எதிரி மீது என்ன வழக்கு போடப்பட்டுள்ளது என்று தெரியாது. 2023ம் ஆண்டு விருதுநகர் மண்டல தலைமை அலுவலகத்தில் வைத்து சமரசம் பேசினோம். பொது மேலாளர், நிர்வாக துறை உதவி மேலாளர் மற்றும் சட்டத்துறை மேலாளர் முன்னிலையில்

பேசினோம். மேற்படி சமரசத்தில் எழுத்துப் பூர்வமான தீர்மானம் எதுவும் நிறைவேற்றவில்லை. எ.சா.ஆ.1 கடிதத்திற்கு பிறகு நிர்வாகம் எனக்கு எந்த பதில் கடிதம் எதுவும் கொடுக்கவில்லை. நான் இந்த வழக்கிற்கு தேவையில்லாத சாட்சி என்று சொன்னால் சரியல்ல.

சாட்சியின் கையொப்பம்

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 2nd day of Febraury 2026.

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

**Chief Judicial Magistrate,**
**Virudhunagar District at**
**Srivilliputtur.**